**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 91/2015 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | சரவணன் | நாள் | 18.06.2024 |
| தகப்பனார் பெயர் | கிருஷ்ணராஜ் (எ) ராஜ்கவுண்டர் | | |

**<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:—</u>**

1) வாதி எனக்கு என்ன உறவுமுறை என்றால், அவர் என் மூத்த சகோதரரின் மகன் ஆவார். வாதி என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், தடம் வேண்டும் என பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி தடம் வீட்டிற்குரியதா? விவசாய நிலத்திற்குரியதா? என்றால், இரண்டிற்கும் உரியது.

2) அரசு அதிகாரிகளான 2, 3 பிரதிவாதிகளை எதற்காக இவ்வழக்கில் வாதி தரப்பினர்களாக சேர்த்துள்ளார் என்றால், தாவா சொத்து நத்தம் நிலம் என்பதால், அரசு தரப்பினரை இவ்வழக்கில் சேர்த்துள்ளார். எனக்கும், வாதிக்கும் இடையேயுள்ள தடவழி பிரச்சனையால்தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

3) மேற்படி நத்தம் நிலம் என்ன வகைபாட்டில் உள்ளது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால், வருவாய் ஆவணங்களில் நத்தம் காலி நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

(2, 3 பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/—திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.